# பொதுக்காலம் 4ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

"இறைவாக்கினர் துணிவு இறைவனில் உண்டாகும்" என்ற உறுதியான சிந்தனையோடு பொதுக்காலம் 4ஆம் ஞாயிறு திருவழிபாட்டு நிகழ்வில் பங்கேற்க வந்துள்ள உங்கள் அனைவரையும் இயேசுவின் இனிய நாமத்தினால் வரவேற்கின்றேன்.

இயேசு தன் பணி வாழ்வில் தொடக்க முதல் இறுதிவரை பலப் போராட்டங்களை, எதிர்ப்புகளைச் சந்தித்தவர். இறைவனின் திட்டம் நிறைவேற அனைத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார். நற்செய்திப் பணியைச் செய்யும் நாம் அனைவரும் கஷ்டமில்லாமல் பணி செய்யலாம் என நினைக்காமல் கிறிஸ்துவுக்காக சவால்களைச் சந்திக்கும் மனத்துணிவுடன் செயல்பட வேண்டும். ஏனெனில் இயேசுவே நம்மோடு இருந்து நாம் செய்யும் பணியில் நிறைவு காணச் செய்கிறார்.

நாம் இறைத் திட்டத்தைப் புரிந்து கொண்டால், கைவிடப்பட்ட நிகழ்வுகள், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட தருணங்களில், "என்னைத் தாங்கிப் பிடிக்க இயேசு இருக்கிறார்" என்ற இறைநம்பிக்கை நம்மில் நிலைபெறும். மலை போன்ற தடைகளையும் தனிமைப்படுத்தப்பட்ட வேதனைகளையும் நம்மால் எதிர்கொள்ள முடியும் என்ற துணிவும், மனிதநேயம் கொண்டு சாதி, மத, இன வேறுபாடுகளைக் களைந்து இயேசு கிறிஸ்துவுக்கள் ஒரே உடலாக மனிதனாக வாழ்ந்திட அருள் வேண்டி இப்பலியில் கலந்திடுவோம்.

### முதல் வாசக முன்னுரை

இறைவனின் அழைப்பு எவ்வளவு மேன்மையானது என்றும் தாயின் கருவிலிருந்து நம்மைத் தேர்ந்தெடுத்து வழிநடத்தி, எந்நாளும் நான் உன்னோடு இருக்கிறேன் என்று ஒரு உண்மையான துணிச்சலான இறைவாக்கினராக மாறிட அழைப்பு விடுக்கும் எரேமியாவின் குரலுக்கு கவனமுடன் செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

புனித பவுல் கிறிஸ்தவ வாழ்வின் இதயமாக இருகும் அன்பைப் பற்றி கூறுகிறார். அன்பு தூய்மையானது, அன்பு நிரந்தரமானது, மனித வாழ்வின் ஆதாரம் அன்பு என்றும், இறையன்பும் பிறரன்பும் கொண்டு வாழும் போது நம் வாழ்வு நிறைவடையும் என்றும் கூறும் திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய மடலின் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பே உருவான இறைவா! திருஅவையில் அன்பும், விசுவாசமும் நிறைந்து நீர் விரும்பிய சமத்துவ சமுதாயம் படைத்திட ஆவியின் வரங்களைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அருளின் ஊற்றே இறைவா! இயேசுவின் பணிவாழ்வில ஆர்வமுடன் துணை நிற்க இளைஞர்கள் உள்ளங்களில் இறை அழைத்தலைத் தந்து, திரு அவைக்குப்

பணிபுரிந்திடும் தாராள உள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணையின் இறைவா! குடும்ப உறவில் அன்பும், பகிர்வும், விட்டுக்கொடுத்தலும் இருந்து நல்ல விசுவாசத்தில் பிள்ளைகளை வளர்க்கத் தேவையான அருளை எங்கள் அனைவருக்கும் தந்திட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதியின் இறைவா! நாட்டில் அமைதி, சமாதானம் நிலைத்திடவும், வன்முறை தீவிரவாதம் மாறிடவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com